மாண்புமிகு சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய யோசனை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் படும்.

Writ petition against Government Order

* 384 Q. THIRU N. S. V. CHITHAN : Will the Hon. Minister for Religious Endowment be pleased to state :

(*a*) whether the attention of the State Government has been drawn to the judgment of the Madras High Court in revising its order on a house owner's writ about the 2nd July, 1969; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) தியாகராயநகரில் உள்ள ஒரு வீட்டை அரசின் பொறுப்பிலிருந்து விடுவிக்க மறுத்து அரசு ஆணை பிறப்பித்தது. அதை எதிர்த்து அந்த வீட்டுச் சொந்தக்காரர் உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார் ரிட் மனுவை அனுமதித்து உயர் நீதி மன்றம் 30-6-69 அன்று பிறப்பித்த ஆணையைப் பற்றி அரசு அறியும்.

(இ) சென்னை, உயர் நீதி மன்றத்தில் மேற்குறிப்பிட்ட ஆணைகளின் மீது மேல்முறையீடு செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

குந்தா மின் திட்டத்திலிருந்து வெளியேற்றப்படும் நீர்.

* 385 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குந்தா மின் திட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வெளியேற்றப் படும் கழிவு நீர் எவ்வளவு கன அடி?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பவானி, குந்தா ஆறுகள் அவற்றின் கிளை ஆறுகளான அவலஞ்சி, எமரால்டு மற்றும் நீலகிரியிலுள்ள பல ஓடைகள் ஆகியவற்றின் நீரை குந்தா மின்சக்தி உற்பத்தி நிலையத்தொடரைச் சேர்ந்த ஐந்து மின்சக்தி உற்பத்தி நிலையங்களில் பயன்படுத்திக் கொண்டு இறுதியாகப் பில்லூர் அணையின் கீழுள்ள குந்தா மின் நிலையம் 4 லிருந்து அது வெளிவிடப்படுகிறது. குந்தா மின் நிலையம் 4 லிருந்து வெளிவிடப்படும் நீரின் அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு :—

1968–69-ம் ஆண்டுக் கால அளவில்—

மொத்தம்	..	31,678·28 மில்லியன் கன அடி.
சராசரி விநாடிக்கு	..	1,004 கன அடி.

1969-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1969-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரையிலுள்ள கால அளவில் :—

மொத்தம்	..	18,438·26 மில்லியன் கன அடி.
சராசரி விநாடிக்கு	..	1,166 கன அடி.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, அவனுசி, கோவை, பல்லடம் ஆகிய தாலுக்காக்களிலுள்ள விவசாயிகள், குந்தா கழிவு நீரைத் தங்களுடைய மூன்று தாலுக்காக்களுக்கும் வாய்க்கால்கள் மூலம் ஏரிகளில் நிரப்பிக் கொடுத்தால் விவசாயத்திற்கு சௌகரிய மாக இருக்கும் என்று அரசுக்குக் கோரிக்கை அனுப்பியிருக்கிறார் களா ? ஆம் என்றால், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்க வேண்டும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : தலைவர் அவர்களே, குந்தா பவர் ஹவுஸ் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று வரிசைக்கிரமமாக இருப்பதில் அந்த பவர் ஹவுஸ்களுக்கு முன்னால் அமைச்சர்கள் பெயர் சூட்டப்பட்டிருக்கிறதா ? அப்படியென்றால் யார் யார் பெயர் ? இன்னும் பெயர் சூட்டப்படாமல் இருப்பது எத்தனை ? அப்படியிருந்தால் அவைகளுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களு டைய பெயரையும், கலைஞர் கருணாநிதி அவர்களுடைய பெயரை யும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுடைய பெயரையும் சூட்ட ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, யார் யார் பெயர் சூட்டப்பட்டிருக்கின்றன என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பரிசீலிக்கப் படும்.

சுருளியருவியிலிருந்து மின் உற்பத்தி

*386 வினு—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கம்பம் அருகிலுள்ள சுருளி அருவி யிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டம் எதும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) மின்சக்தி உற்பத்திக்காக சுருளியாற்றின் நீரைப் பயன் படுத்திக்கொள்ள வகை செய்யும் திட்டம் நான்காவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படக் கருதியுள்ள திட்டங்களில் ஒன்றாகும். இத் திட்டத்திற்காக ரூ. 400 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்படுகிறது. 35 மெகாவாட் உற்பத்தித் திறனுள்ள மின் உற்பத்தி நிலையம் ஒன்று மட்டுமே இத் திட்டத்தில் செயல்படும்.